



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்களின் நிழல்

- த. திரேஸ்குமார் -

- வெளியீடு -
''சிந்தனை வட்டம்''
14 உடத்தலவின்னை மடிகே
உடத்தலவின்னை - 20802
ஸ்ரீலங்கா
தொலைபேசி : 08 - 493892 / 08 - 493746 / 078 - 680645
தொலைநகல் : 08 - 497246

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஜங்களின் நிழல்
(கவிதைத் தொகுதி)

நூலாசிரியர்: த. திரேஸ்குமார்.

டெமேரியா
தொழிற்சாலைப் பிரிவு
பசறை

முதலாம் பதிப்பு: 2002 மார்ச்
பதிப்புரிமை : ஒதுக்கப்பட்டுள்ளது.
வெளியீடு : சிந்தனை வட்டம்.

நூலாசிரியரின் பிற வெளியீடு

⌘ **இது தான் மலையகம்.**
(கவிதைத்தொகுதி)

அச்சுப்பதிப்பு :
**CREATIVE PRINTERS**
No; 3A, Bahirawakanda Road, Kandy.
Tel;074-472048,071-799131

கணனிப்பதிவு : Miss M. N.Z. Munawwara
Udatalawinna Commiunication

புத்தக அமைப்பு: N.L.S Salahudeen
Miss J. Jazeema
Udatalawinna Commiunication

65/=



# சமர்ப்பணம்

என் இனிய தந்தையை
தன் மகனாய்ப் பெற்றெடுத்துத்
தரணியிலே வாழ்வளித்துத்
தரங்கள் பல உயர்த்தி விட்டு
இடைநடுவில்
இறைவனடி சேர்ந்து விட்ட
தாத்தா
"***அமரர் திரு* S.P. *வேலன்***"
அவர்களுக்கு
இந்நூல்
**சமர்ப்பணம்**

# புகழுரை

மலையகம் ‘‘ வெறும் தேயிலை விளையகம்’’
என்று மாத்திரமே - சிலர்
எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்!
கலையெல்லாம் இவர்களுக்குத்
தொலை தூரம் என்று
விலை பேசியும் கொண்டிருக்கின்றார்கள்!
இருக்கட்டுமே!
சளைக்காமல் எழுதி சரித்திரம்
படைத்தவர்கள் எத்தனையோ பேர்!
இன்னும் இப்போதும்
முளை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள்
பலபேர்!

அந்த முளைவிடும் தழைகளுக்கு
உரம்போடத்திறம் இல்லாவிட்டால்
பரவாயில்லை உற்சாகம் எனும்
முட்டுக் கொடுக்க வேண்டும்.!
‘‘ இவருக்கும் தான் ’’

திறமான கவியெழுதி - அதனைப்
பரண்மேல் கட்டிவையாமல்,
புத்தக உருவாகக் கொண்டு வரும்
திரேஸ்குமாரை வாழ்த்துவோம்!

அன்புடன்
**K. மயில்வாகனம்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
மலையக சேவை,
புஷ்பதான மாவத்தை,
கண்டி



# பதிப்புரை

வளர்ந்த பின் களமமைக்க
வள்ளல்கள் பலர் வரலாம்.
வளர்ந்தவர்களைத் தட்டிக் கொடுக்க
ஊடகங்கள் போட்டியிடலாம்.
விமர்சகர்கள் நான் முந்தி நீ முந்தி எனப்
புகழ்மாலை சூடலாம்.

ஆனால்....
வளரத்துடிப்பவர்களுக்கு
நீரூற்ற வள்ளல்கள் இல்லை.
உரமூட்ட ஊடகங்களுக்கும் கஞ்சத்தனம்
விமர்சகர்களுக்கும் இவர்கள் மின்மினிப்பூச்சிகள்.

வட்டத்துக்குள் வட்டமிட்டு
உலகத்து எல்லையைத் தொட்டுவிட்ட சிலருக்கு
‘மையம்’ தெரிவதில்லை
தமிழ் இலக்கிய உலகில்
மூடி மறைந்துள்ள யதார்த்தம் இது.

வளரத்துடிக்கும் அரும்புகளுக்கு
நீரூற்றி -
உரமூட்டிப் போஷிக்கும் போது -
அந்த அரும்புகள் நாளை கிளை பரப்பலாம்.
நிழல் தரலாம்.
எனவே தான் -
சிந்தனை வட்டம்
அது
நாளைய சந்ததியின் இன்றைய சக்தியென்ற
கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தம்பி த. திரேஸ்குமார்
தமிழ் இலக்கியத்தின் மீதும் -
தான் வாழும் சூழல் மீதும் வைத்துள்ள ‘காதல்’
தூய்மையானது, களங்கமற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளித்திரியும் பள்ளிப்பருவத்திலே
தனது பதினெட்டாவது வயதில்,
இது தான் மலையகம் எனும்
கன்னி நூலை
அரங்கேற்றி விட்ட அவர்
பள்ளிப் பருவம் முடிய முன்பே
தனது பத்தொன்பதாவது வயதில்
இரண்டாவது படைப்பையும்
அரங்கேற்றிட ஆசைப்பட்டதன் விளைவே
இப்போது
நிஜங்களின் நிழல்கள் உங்கள்
கைகளில் தவழ்கின்றது.

நான் ''இன்று'' என்ற நிலையில் அல்லாமல்
நான் ''நேற்று'' என்ற நிலைக்கு மாறி
நீங்கள்
நிஜங்களின் நிழலை ஆராயுங்கள்.
'கனதி' நிச்சயம் நாளை வரும்
என்ற நம்பிக்கையில்,
இந்த அரும்பிற்கு
நாளைக்கான ஆசீர்வாதங்களை வழங்குங்கள்
அது நாளைய நம்பிக்கைக்கான
இன்றைய உரமூட்டலாக அமையட்டும்.

நன்றி!

**புன்னியாமீன்**
(பணிப்பாளர்)

**சிந்தனைவட்டம்**
நாளைய சந்ததியின் இன்றைய சக்தி.



## வாழ்த்துரை

மாணவப் பருவத்திலே கவிதை எழுத வேண்டும் என
ஆர்வம் கொண்டு ' இதுதான் மலையகம்' என்ற
கவிதைத் தொகுதியொன்றை வெளிக்கொணர்ந்த
இளைஞர் த. திரேஸ்குமாரின் இரண்டாவது கவிதைத் தொகுதியும்
வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.
அவரது கவியார்வம் மேன்மேலும் வளர வேண்டும்.

திரேஸ்குமாரின் முதல் நூலிலும், இந்நூலிலும் வெளிவந்துள்ள
கவிதைகள், அவரின் கவித்துவத்தை
வெளிக்காட்டப் போதுமானவை அல்ல.
அவர் தொடர்ந்தும் கவிதைகள் எழுத வேண்டும்.
வசனங்களை முறித்து எழுதுவது கவிதைகள் ஆக மாட்டா.
திரேஸ்குமார் தரமான கவிதைகளைத் தேடி வாசிக்க வேண்டும்.
தமது தமிழறிவை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
தமது கவிதைகளின் தரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும.

கவிதைத்துறையில்
தவழ்நிலையில் உள்ள ஆர்வம் மிக்க இளைஞர் திரேஸ்குமார்,
எதிர்காலத்தில் இத்துறையில்
நிமிர்ந்து நடைபயில் வேண்டுமென வாழ்த்துகிறேன்.
முயற்சியையும், திறமையையும் வளர்த்துக்கொண்டால்,
எதிர்காலத்தில் தரமான கவிஞராக
அவர் உயர வாய்ப்புண்டு.

**கலாநிதி துரை. மனோகரன்**

தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

'சமாதான விளக்கினைச்
சமத்துவமாய் ஏற்றுங்கள்
இரத்த வெள்ளம் ஓய்ந்து
வெண் புறாக்கள் வலம் வரட்டும்.

ஆம், காலத்துக்கேற்ற கவிதைகள். நாட்டில் வெண் புறாக்கள் இப்போது வலம் வருகின்றன. ஒரு சில கவிதைகளைத் தவிர ஏனையவைகள் யதார்த்தங்கள் நிறைந்தவை.

பள்ளிப் பருவத்திலே பல்லாயிரம் கவிதைகள் படைத்துவிட வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர் திரேஸ்குமார்.

சிறந்த கற்பனைச் சக்தி வந்திருந்தால் சில வேளைகளில் கம்பனைப் போல் காவியம் படைக்கவும் முயன்றிருப்பேன் என்று கூறும் அவர் நிறைய வாசித்து தமிழறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'சொத்துச் சேர்க்க
சென்றங்கு
செத்து விட்டேன்'
உள்ளத்தால்
காசுதேட
சென்றவள் நான்
கருவோடு வீடு வந்தேன்.

தினமும் நாம் பத்திரிகைகளில் வாசிக்கின்றோம் வெளியூர் சென்று திரும்பும் பணிப்பெண்களின் அவலங்கள் அவை. அவற்றை 'வெளியூர் போனேன்' என்ற தலைப்பில் அழகாக வடித்து விட்டார். பேராதனை தாவரவியல் பூங்காவில் அவர் நேரில் கண்டவைகளை 'சோலைக்குள்ளே; என்ற தலைப்பில் வீடியோ படம் பிடித்துக் காட்டும் திறமை மெச்சத்தக்கது.

கவிதைத்துறையில் மிகுந்த ஆர்வமுள்ள திரேஸ்குமார், அவர் சார்ந்த சமுதாய உயர்வுகளுக்காக, சமுதாய சீர்திருத்தங்களுக்காக கல்வித்துறை வளர்ச்சிக்காக கவிபடைக்க வேண்டும். நிச்சயம் தரமான கவிஞராவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

கம்பனைப் போல் காவியம் படைக்க கடவுள் அருள் புரிய வேண்டும். வாழ்த்துகிறேன்.

உடத்தலவின்னை - பரீல்

37, மடிகே
உடத்தலவின்னை.



# என்னுரை

பாடியவன் வரைகின்றேன்,
என் விரல் இடுக்குகளில் சிக்கித் தவித்த
பேனையின் உதிரங்களால்.

என் கவிதைகள் ஒன்றும் கற்பனை அல்ல
உள்ளத்தின் சிந்தனையால் வந்த,
உலக உண்மைகளின் வெளிப்பாடு.

கண்ணால் கண்டவை,
காதால் கேட்டவை,
அனுபவத்தால் அறிந்தவை,
அனைத்தும் அடங்கலாகச்
சிந்தனையில் சொல் தேடிச்
சீர்படுத்தி யாத்தெடுத்த
உள்ளம் உணர்ந்த
உண்மைகளின் வெளிப்பாடு.

இவை கற்பனைகள் அல்ல!
''மெய்க்கணைகள்''

ஏவுகணையிலும்
பலம் வாய்ந்த பேனைமுனை
சிந்திய உதிரம்.

இவை வெறும் கவிதைகள் அல்ல!
''எரிகணைகள்'
உலகை அழிக்கும் எரிகணை அல்ல!
உண்மைகளை உணர்த்தி உள்ளத்தின்
கண்களைத் திறந்து.
உலக மானிடருக்கு
நல்வழி காட்ட முயலும்
ஒரு விடலைப் பருவ இளைஞனின்
பேனைமுனை சிந்திய உதிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கவிதைகள் சூழல் தேவையாயின்
ஆயுதமாயும் மாறும்''
என என் முதல் நூலின்
வாழ்த்துரையில் ஆசிரியர் மை. பன்னீர் அவர்கள்
எழுதிய வசனங்களுக்கு அமைய
இவை, யான் படைத்த
''சொல்லாயுதங்கள்''
நான் இன்னும்
தமிழைத்தரமாகப் பயிலவில்லை.
அதனால் தான் இந்த யாப்பிலிக்
கவிதைகளை யாத்துள்ளேன்.
இக்கவிதைகள் யாப்பிலக்கணம்
தவறினாலும்
மெய்யுரைக்க முயல்வனவே.

எனக்கின்னும் சிறந்த கற்பனைச் சக்தி
வரவில்லை.
வந்திருந்தால் சில வேளைகளில்
கம்பனைப்போல் காவியம் படைக்கவும்
முயன்றிருப்பேன்.
கற்பனையும் தமிழறிவும் சேர்ந்திருந்தால்
கற்றறிந்தவர் மட்டும் படித்தறியும் படி
மரபுக் கவிதைகளைப் படைத்திருப்பேன்.

இப்படி,
எழுத்தறிந்தவர் அனைவரும்
படித்தறியும் படி
இயல்பு நடையில் புதுக்கவிதைகளைப்
படைத்திருக்க மாட்டேன்.
இருந்தும் இதனால் வேதனைப்படவில்லை.
என் கவிதைகளை எழுத்தறிந்தவர்கள்
அனைவருமே படித்தவர், என்றெண்ணி
அகம் மகிழ்கின்றேன்.



தவழும் வயதில் குழந்தைகள் தடுக்கி
விழுவதுண்டு. அச்சமயம் நிமிர்ந்து
நடப்பவர்கள் தூக்கி விடுவதுண்டு
சிறு குழந்தைகளின் தவறுகளைத் திருத்தலாம்
அன்பாகச் சொல்லி
ஆனால் தண்டிக்கலாகாது.
சிறு குழந்தை பிரம்படி தாங்காது.
கவிதை உலகில் தவழும் வயதில் இருக்கும்
கற்பனை சக்தியும் தமிழறிவும் நிரம்பாத
இக் கவிக் குழந்தையின் தவறுகளைக்
கவிதை உலகில் நிமிர்ந்து நடக்கும்.
கவிமணிகள் திருத்தலாம்.
தப்பிருந்தால் தண்டிக்கலாம்.
ஆனால்...
''பிரம்படியிலும் வலிமையானது சொல்லடி''
இக்குழந்தை தடுக்கிவிழும் போது
நிமிர்ந்து நடப்பவர்கள் தூக்கிவிட வேண்டும்.
குழந்தைகள் பிறந்தவுடன் சிரிப்பதில்லை
அழுகின்றன - ஆனால்
பிரசவவேதனையையும் மறந்து
ஆனந்தக் கண்ணீர் வடிப்பவள் அன்னை.
சில நூல்கள்
வெளிவந்தவுடன் அழுகின்றன (விமர்சனங்களால்) -
ஆனால்
அதை வெளியிடும்போது பட்ட கஷ்டங்களையும்
மறந்து வெளியான மகிழ்ச்சியில்
ஆனந்தக் கண்ணீர் வடிப்பவன்
நூலாசிரியன்.

நன்றி

**த. திரேஸ்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மனக்கண்ணில் இவர்கள்.

மண்ணில் படைத்து
மனதில் கவி படைத்த
மண்ணின் வேந்தனுக்கு.

அன்பாய் அரவணைத்து
அறிவூட்டும் பெற்றோருக்கு.

கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்து முன்தோன்றிய
மூத்த தமிழுக்கு.

வாழ்த்துரை வழங்கி
குறைகளை குறிவைத்து
நிறைகாண வழிசொன்ன
கலாநிதி துரை. மனோகரன்
அவர்களுக்கு.
அன்னாரை சந்திக்க
அடியேனுக்கு வழி சமைத்த
''ஆவணகளஞ்சியம்''
குடும்பசிட்டி கனகரத்தினம்
அவர்களுக்கு.

வானலையிலென்னை
கவிஞனாய் வெளிக்காட்டி
இந்நூலில்
புகழுரையும் தந்தவர்
K. மயில்வாகனம்
அவர்களுக்கு.

கவிதைக்குள் புகுந்து
அவற்றை ஆராய்ந்து
மதிப்பிட்டு மதிப்புரை வழங்கிய
உடத்தலவின்னை - பரீல்
அவர்களுக்கு.

இந்நூலிற்கு
மதிப்புரைவழங்கி
தன் வெளியீட்டில் ஒன்றாக
''நிஜங்களின் நிழல்'' ஐயும்
ஏற்றுக் கொண்ட
நாளைய சந்ததியின்
இன்றைய சக்தியாக
''சிந்தனை வட்டத்தை''
சீர் பட நடத்தி வரும்
ஐயா புன்னியாமீன்
அவர்களுக்கு.

பதுளையில் பிறந்தவனை
தலவின்னை மண்ணில்
கவிதைத் தொகுதியொன்றை
வெளியிட
ஆலோசனை பல தந்து
ஊக்கப்படுத்திய
தலவின்னை சிபார்
அவர்களுக்கு

''நிஜங்களின் நிழல்'' ஐ
விழாகொண்டு வெளியிடும்
''உடத்தலவின்னை அரபாத்''
சங்கத்தினருக்கு.

தோளோடு தோள் நின்று
துணை புரிந்த தோழர்களுக்கு.

''தங்கவேலு - பவானி''
தம்பதியினரின்
தலைப்பிள்ளை நான்
தலைவணங்குகிறேன்.



# நிஜங்களின் நிழல்...

நல்லாசி

அனைவரும்
அனைத்தும்
அறிந்தவர்களுக்கும் அல்ல.
அனைவரும்
அனைத்தும்
அறியாதவர்களும் அல்ல.



அறிந்ததை
அறியாதவனுக்கு
அறிவிப்பவன் ஆசான்.
அறியாததை
அறிந்தவன் மூலம்
அறிந்து கொள்பவன்
அறிவாளி.


நீ
அறிவாளியான
ஆசானாக இரு.
அன்னையின்
அன்பிற்கென்றும்
அடிமையாயிரு.
எதிர்ப்பாற் கவர்ச்சியால்
நல்லெதிர் காலம் இழக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை

விஞ்ஞானத்தின்
விந்தைகள்
விண்ணுக்குச் சென்றாலும்
இயற்கையை வென்றவர்
என்றிங்கு யாருண்டு?
இரவும் பகலும்
இயற்கையின் மாறல்கள்
இது போல்
இறப்பும் பிறப்பும்
இறைவனின் கொடைகளே!
பிறக்கையில் துணை ஒன்று
உன்னுடன் வரவில்லை.
இறந்தபின் இணைந்திடத்
துரும்பொன்றும் இங்கில்லை.
மாளிகையில் வாழ்ந்தாலும்
மன்னன் மாண்டதும்
அடங்கிடக்கிடைப்பது
ஆறடிக் குழி ஒன்றே.





# பசி என் தோழி



எட்டுத் திக்கும்
ஏவு கணைகள்
ஏவிட
எரிந்து விழுந்தன
எங்களது வீடுகள்.

பண்டங்கள் அழிந்தன
பஞ்சங்கள் எழுந்தன
பட்டினி தலை தூக்கப்
பசி எம்மை வாட்டிட

மனித குலம் அழிந்திட
மண் வளமும் குறைந்திட
மக்கள் மனம் உருகிட
மாக்கள் மனம்
மகிழ்ந்திட.

பட்டினி வழக்கமாகிட
பசியில்
பழக்கம் பெற்றிட
பசி என் தோழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தம்

மண்ணில் பிறந்தவன்
மண்ணுக்கே போராடி
மாண்டு மடிந்து
மண்ணிலேயே,
புதையும் அவலமிது.
எண்ணற்ற இளைஞர்கள்
மண்ணிலே புதைந்திட
இரத்த வெள்ளம்
கடலிலே கலந்திட
உலக அழிவின் அத்திவாரம்
உள் நாட்டில் ஆரம்பம்.

## செம்பு



தரையில் பெற்ற தங்கம்
அங்கம் எங்கும் - தொங்க
உதவும் தோழன்.



## சமாதானம்



சாதிமத பேத வெறி
தலைக் கேறிய காரணத்தால்
தரங்கெட்ட முறையினிலே
சண்டையிடும் மாந்தர்களே!
துவக்குகளைக் கையிலேந்திக்
குறிபார்த்துச் சுடுவதனால்
அழிவதும் நம் நண்பர்களே!
அன்பினிலே அன்னையாக
நன்றியிலே நாயாக
ஒற்றுமையில் காக்கையாகத்
துவக்குகளை எறிந்துவிட்டு
இருண்டு கிடக்கும் நம்நாடு
ஒளி பெற்று உயர்ந்திடச்
சமாதான விளக்கினைச்
சமத்துவமாய் ஏற்றுங்கள்
இரத்த வெள்ளம் ஓய்ந்து
வெண் புறாக்கள் வலம்வரட்டும்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்மை

நலன் விரும்பிகளே!
நிறைகளைப் பேசிப்
பொழுதை வீணடிக்காது
குறைகளைச் சுட்டிக்காட்டி
எவரதும் நிறைகளைக்
கண்டிடுவீர்.

பத்திரிகையாளர்களே!
கிடைத்ததை எழுதிப்
பக்கங்கள் நிரப்பாது
கிடைக்க வேண்டியதை எழுதி
அவை கிடைத்திட
வழி சமைப்பீர்.

அரசியல் வாதிகளே!
நீர் செய்ததைக் கூறிப்
பெருமையாகப் பேசாது
செய்ய வேண்டியதைக் கேட்டுச்
சேவைகளைக்
செய்திடப் பாரீர்.





## தனியார் வண்டி

ஊர் பேரைச்
சொல்லி அழைப்பர்- சிலர்
உட்கார இடமும் தருவர்
மேலும் பலரைப்
பாடி அழைப்பர்
பத்தடி கடக்கப்
பல மணி எடுப்பர்.

முன்னால் சென்று
பின்னால் வந்து
பயணிகளைக்
கெஞ்சி அழைப்பர்
ஊசி துளைக்க
இடைவெளியின்றிச்
சாமர்த்தியமாய்
மக்களை அடுக்குவர்.



ஆமை வேகத்தில்
அசைந்தே செல்வர்
அரச வண்டிகளைக்
கண்டால் பறப்பர்.
மாத வரவை
ஒரு நாளில்
உழைப்பர் - ஆனால்
கட்டணம் உயர்த்தப்
போராட்டம் செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக் கடன்

நட்பின் கற்பைக் காக்க
நாயாகப்பாடுபட்டு
நண்பனின் துயர் துடைக்க
அவன்
துன்பத்திலும் பங்கேற்றேன்
நான்
தீக்குளிக்க முனைகையில்
அவன்
தீப்பெட்டியைப் பரிசளித்தான்.


## விதி இட்ட வழி



தம்பியரின்
தாக்குதல்
தாங்காது
நானாக்களை
நாசம் செய்ய
நாடெங்கும்
மோசம் செய்யும்
நயவஞ்சக
நாட்டினிலே
நல்வாழ்க்கை தேடுவது
சிறுபான்மை இனத்தவர்களின்
பேராசை போலாகும்.



## தமிழ் வேட்டை



யுத்த களத்தில்
செத்த உடல்களின்
இரத்த வாடை கண்டு
வெறி கொண்ட சிங்கங்களின்
திட்டமிட்ட வேட்டை ஒன்று
தீபாவளியை முன்னிட்டுத்
தீவிரமாய்த் தீர்ந்ததுவே!

⌘ ⌘ ⌘ ⌘

திட்டத்தை அறியாது
வட்டத்துள் சிக்குண்ட - சில
அப்பாவி மான்கள்
அன்று
''பிந்துனு வெவயிலே
தீக்கிரை ஆகினவே
புனர்வாழ்வு தேடியவை
இறைபாதம் சேர்ந்தனவே

⌘ ⌘ ⌘ ⌘

திண்டு தீர்த்த சிங்கங்களின்
''ஏப்ப ஓசை - சில
தமிழ் ஊர்களிலும்
தம்பட்டம் அடித்ததுவே
இதனால்
மேலும் சில
தமிழ்ப்பிணங்கள் சேர்ந்தனவே!

தட்டிக் கேட்ட
தலைவர்கள்
தம் தலை காத்திடவே
தம் வழிசென்றனரே!

⌘ ⌘ ⌘ ⌘

இப்போ
சட்டம் பயிலும் - சில
வக்கீல்களின்
வாதப்பயிற்சிக்கோர்
வழக்காக
வானில் அலைபரப்பி
வாதாட்டம் நடக்குதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிக்குத் தேவை (வி)வேகம்


விண்வெளிக்குச் சுற்றுலாபோகும்
விஞ்ஞான யுகத்திலும் - நீ
மூட நம்பிக்கைகளில்
மூழ்கிக்கிடப்பதேனோ ?
சகுனம் பார்த்துச்
சடங்கு செய்து
சலித்துக் கொள்ளும்
சங்கடமான
சமுதாயமே!
நாட்கள் ஒன்றும்
நகரவில்லை
ஓடுகின்றன
வாழ்க்கைப் பாதையில்,
நகருவதேனோ நாங்கள் தான்
இந்நிலை இனியும் வேண்டாம்
நாட்களின் வேகத்திற்கீடு கொடுத்து
எட்டி நடைபோடத்தயங்கின்,
உன் இலக்கை அடையுமுன்னுன்
பூதவுடல் - அது
பூமிக்குள் புதைந்து விடும்.

விண்வெளியில் வீடுகட்டும்
விசித்திர உலகமிதில் - உன்
வீண்பேச்சினால்
பொன்னான பொழுதை
மண்ணாக்காதே - இந்த
விந்தை மிகுந்த உலகிலே -உன்
சிந்தை மிகுந்த செயல்களால்
வெற்றி நடைபோட
விவேகமுடன்
வேகமாய்ச் செயற்படு.





## பெற்ற பாவமோ ?



ஊர்ப்பள்ளியில்
சித்தி பெற்று
உயர் தரம்
கற்கவென - அவன்
பட்டணத்தை நாடிவந்தான்
❐ ❐ ❐ ❐ ❐
நாள்தோறும் பாடுபட்டு
நாலுகாசுதேடி - அதை
தன் மகனின்
கல்விக்கெனத்
தாரைவார்த்த அவன் தந்தை
தன் மகனைப் பலதடவை
வைத்தியனாய்க்
கனாக்கண்டார்.
❐ ❐ ❐ ❐ ❐
மாதாமாதம்
அவன் கையில்
சுளைசுளையாய்ப்
பணம் வரவே
கட்டுப்பாடும் இல்லாததால்
சுதந்திரமாய்ச் செயற்பட்டான்.
❐ ❐ ❐ ❐ ❐
ஓய்வு நேரப்
பொழுது போக்கக்
கொட்டகைக்குச்
சென்று வந்தான்.
நண்பருடன் சேர்ந்திருந்து
ஆபாசக் காட்சி கண்டான்
அதை
அனுபவிக்க ஆசைப்பட்டு
விடுதிகளை
நாடிச்சென்றான் - அங்கு
மதுவோடு மாதைக் கண்டான்.
❐ ❐ ❐ ❐ ❐
பரீட்சைக்காலம்
நெருங்கிடவே
விழித்திருந்து
படிக்கவெனத்
தனியறையில் தங்கியவன்
நண்பருடன் சேர்ந்திருந்து
புகை பிடித்துக் கெட்டு விட்டான்.
❐ ❐ ❐ ❐ ❐
பெறுபேறு வந்தவுடன்
மூன்று ''கொடிகள்''சுமந்து கொண்டு
ஊர் வர வெட்கப்பட்டு
பெற்ற கடன் பலவிருக்கப்
பெற்றோரைத் தவிக்க விட்டுப்
''பாஸ்போட்'' எடுத்துப்
பறந்து விட்டான்.
❐ ❐ ❐ ❐ ❐
பட்டணத்தில்
படித்து வந்த தன் மகனை
ஊர்ஊராய்ப்
பெருமைபேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய கனவு கண்டவர்கள்
ஊர் அறிய
உண்மை பேசல்
அவமானம் என்றெண்ணி
வெட்டுப் புள்ளி குறைவென்று
வேதனையாய்ப் பொய்சொல்லிப்
பெற்றபெறுபேற்றிற்கு
வெளி நாட்டில்
வேலையென்றார்.
பெற்ற மகனின்
எதிர்காலம்
இன்பமாக அமைந்திடவே
பாடுபட்டு உழைத்தவருக்கு
வேதனையைப் பரிசளித்தான்.
கனவுகள் பல
கண்டவர்கள் கண்களுக்குக்
காலமெல்லாம்
கண்ணீரைப் பரிசளித்தான்.

❐ ❐ ❐ ❐ ❐

பத்து மாதம் சுமந்துன்னைப்
பெற்றதென்ன பாவமோ? - நீ
பட்டம்பெற வேண்டும் என
எண்ணியதும் பாவமோ? - அது
பேராசையாகுமே?

❐ ❐ ❐ ❐ ❐

காலத்தின்
கோலங்களுக்கு அடிமையாகி
அழிந்துபோன
பித்தனே! - உனைப்
பெற்ற மனம் வாடுதடா நித்தமே!



## காவலர்கள்



தமிழன் என்ற சொல்லுக்குப்
புலிகள் என்றொரு
புனைப்பெயர் சூட்டி
இனவெறியைத் தீர்ப்பதற்குப்
''புலி வேட்டை''
எனும் பெயரில் - பல
புண்ணிய ஸ்தானங்களைச்
செல்லடித்துத் தகர்த்தி
நாடெங்கும் வெடி வைத்து
கொள்ளை, கொலை செய்து
சந்தேகம் பல கொண்டு
தமிழர்களைச் சிறைபிடித்து
சித்திரவதை பண்ணி
அழிப்பது மட்டுமின்றி
பாவையரைக்கைதாக்கி
பாலுறவு பண்ணுதடா - நம்
நாட்டைக் காக்கும்
காவல் துறை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெண்களல்ல



இரண்டங்குலத்
துணிகளிலே
ஈரிடங்கள்
மறைந்தவண்ணம்
''கெமராக்கள்''முன்னாலே
பணத்திற்காக
ஆடுகிறாள்.
ஜ. ஜ ஜ ஜ
அரைகுறை ஆடையுடன்
அலங்காரம் செய்துகொண்டு
வீதியிலே அலைகின்றாள்.
ஜ ஜ ஜ ஜ
அழகு எனும்
போதை ஏற்றி
ஆண்களை மயக்குகிறாள்.
விடுதிகளில் பணம் பெற்று
விபசாரம் செய்கின்றாள்.
ஜ ஜ ஜ ஜ
கற்பு எனும் பொக்கிசத்தை
விலை பேசி விற்கின்றாள்.
உடலை விற்று உயிர்வாழ
ஊர்ஊராய் அலைகின்றாள்.
ஜ ஜ ஜ ஜ
ஆபாசப் படங்களிலே
ஆடையின்றி அம்மணமாய்
அசிங்கமாக நடிக்கின்றாள்
ஜ ஜ ஜ ஜ
பாவம் - சில
அப்பாவி ஆண்களைக்
காதலித்துக் கைவிட்டு
பணக்காரக் கணவனுடன்
மணவாழ்க்கை புகுகின்றாள்
ஜ ஜ ஜ ஜ
கற்பை இழந்தும்
கவலை இன்றிப்
புதுக் கணவன் தேடுகின்றாள்.
ஜ ஜ ஜ ஜ
வீட்டினிலே கணவனுக்கு
நல்லவளாய் நடித்துக்கொண்டு
வெளியில் - சில
ஆண்களுடன்
வித்தைபல செய்கின்றாள்.

ஜ ஜ ஜ ஜ
நாற்குணங்கள் ஏதுமின்றி
நாய்களைப் போல் அலைகின்றாள்
இவர்கள்
பெண்களல்ல
பேய்களடா!



## யாரென்று சொல்லுவது?



நாளுக்கொரு
பெண் பின்னால்
நாய் போல அலைகின்றான்.
ஐந்து நிமிட இன்பத்திற்கு
ஐநூறும் கொடுக்கின்றான்.
ஆண்களுக்குக் கற்பில்லை
என்றெண்ணி வாழ்கின்றான்.
காம இச்சை தீர்க்கவெனப்
பலர் வாழ்வைக் கெடுக்கின்றான்.
ஆனால்...
முதல் இரவில் மனைவியிடம்
கன்னித்திரை தேடுகின்றான்
காதலித்த கன்னியரைக்
கணப்பொழுதில் வெறுக்கின்றான்.
தான் செய்த லீலைகளைக்
கனவு போல மறந்துவிட்டுத்
தூய்மையான துணை ஒன்றைச்
சீதனத்தோடு தேடுகின்றான்.
மனையிலே துணை இருக்க
மனம்போன போக்கெல்லாம் - சில
மாதருடன் அலைகின்றான்.
நாகரிகம் என சொல்லிப்
பெண்வேடம்
போடுகின்றான்
போதைகளுக்கு அடிமையாகி
ஆண்மையை இழக்கின்றான்.
பள்ளி செல்லும் வயதினிலே
புகை பிடித்து அழிகின்றான்.
சுருள் சுருளாய்ப் புகைவிட்டு
இளமையிலே முதிர்கின்றான்.
காளையனாய் அல்லாது
காடையனாய் அலைகின்றான்.
பெற்றோரின் உழைப்பினிலே
இவன்
இத்தனையும் செய்கின்றான்.
இவனை
ஆண் என்று சொல்வதா?
யாரென்று சொல்லுவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோலைக்குள்ளே...

தாவரவியல் பூங்காக்கள்
இப்போ
காமதேவன் கோயிலாக
மாறிவருகிறதடா.
பல கன்னியரின்
கன்னித்திரைகள்
கணப்பொழுதில்
காணாமல் போகுதடா.
இரத்தப் பலி கொடுத்து
முத்தங்களின் ஓசையாலும்
மூச்சிறைக்கும் ஓசையாலும்
காம தேவனுக்குப்
பூஜை பல நடக்குதடா.
பட்டப் பகலில், வெட்ட வெளியிலே
பலருக்குச்
சாந்திமுகூர்த்தம் நடக்குதடா.
புல் மெத்தையிலே
சொர்க்க இன்பங்கண்டு
வெட்கம் இன்றியிவை
இத்தனையும் நடக்குதடா.

❒ ❒ ❒ ❒



ஐந்தறிவு ஜீவன்கள் போல்
வெட்கமின்றி
வெட்ட வெளிகளில்
லீலைபண்ணும் மூடர்களே
நான்கு சுவர்களுக்குள்
நாணயமாய் நடப்பதை
நாடகமாய்க் காட்டாதீர்
கணவன் மனைவி கொள்ளும்
கண்ணியமான உறவிதைக்
கள்ளக் காதலர்கள்
பண்ணுவது தவறடா
சிறுவர் முதல்
முதியோர் வரை
வந்து போகும் இடமிதை
உம்
தனியறையாய் நினையாதீர்
பூந்தோட்டத்துக்குள்
பல பூக்களைக் கசக்காதீர்.



## சீதனம்

திருமணச்சந்தையில்
மணமகன் போகும்
உச்ச விலை

⌖ ⌖ ⌖ ⌖

பெண்களைப் பெற்றவர்
சம்பந்திக்குக் கொடுக்கும்
இலஞ்சம்

⌖ ⌖ ⌖ ⌖

பெற்ற பிள்ளையை
விற்றுத் தின்றிடும்
இழிவான
பெற்றோர்கள் - தம்
விற்பனைக்கு இட்ட
புனைப்பெயர்

⌖ ⌖ ⌖ ⌖

வெட்கம் கெட்ட
ஆண்கள் செய்யும்
பகிரங்க
விபச்சாரம்.

⌖ ⌖ ⌖ ⌖

மணவாழ்க்கைக்குப்
பெண்கள் இடும்
மூலதனம்

முதுகெலும்பற்ற ஆண்கள்
பெண்களிடம் பெறும்
பிச்சை

⌖ ⌖ ⌖ ⌖

ஆண் சுகத்திற்கு
ஏங்கும் பெண்கள் தம்
இச்சை தீர்க்கச்
சொந்தமாய் வாங்கும் - ஒரு
விபச்சாரனுக்கு
கொடுக்கும் கூலி

⌖ ⌖ ⌖ ⌖

கட்டியவளைக்
கட்டி அணைக்கக்
காளையன் பெறும் கூலி.



⌖ ⌖ ⌖ ⌖

ஆண் விற்பனை.
விந்தை மிக்க உலகில்
இது ஒரு
சிந்தை கெட்டசெயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கர வண்டி

மூலை முடுக்குகளில்
முண்டி யடித்துக்கொண்டு
உச்ச வேகம் கொண்டு
துச்ச நேரத்துக்குள்
மிச்ச ஓட்டம் ஓடும்
வீர சாரதிகளின்
சாகச வண்டியிது.

● ● ● ●

சங்கடமின்றிச்
சொல்லிட எங்கும்
சென்றிடும் வண்டி - தன்னை
செலுத்தும் நபர் கண்ணில்
சந்தி சமிக்ஞைகளைக்
காட்டமறுத்திடும் - ஒரு
மாய வண்டியிது.


● ● ● ●

காதல் சோடிகளைக்
காவிச் செல்லுமிது - சில
காதல் ஜோடிகளின்
காவிய மேடையும்
சொர்க்க சுகம் கொடுத்த
பள்ளியறையும் இது.



● ● ●

என்
கன்னச் சதையில்
உன்
எண்ண கவடுகள்



● ● ●

என்
கன்னத்தில் பதிந்த
உன்
உதட்டுச் சாயங்களைச்
சவரக் கத்தியால்
புண் படுத்த விரும்பாததன்
விளைவு

● ● ●

ஆண்கள்
மட்டும் பெற்ற - ஓர்
இயற்கை அழகு

● ● ●


உள் மனதின்
ஊமைக்காயங்களின்
பிரதிபலிப்பு

● ● ●

உன் இதழின்
ஈரங்கள்
காயாது காக்கக்
காவலிட்டேன்

● ● ●

பெருகிவரும்- நவயுகம்
பெண்கள் மத்தியில்
ஆண்களை இனம்காண
இது ஒரு ''துப்பு''



● ● ●

விவரமாகச்
சொல்வதானால்
சவரம்செய்யச்
சல்லி இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்கவே பிறந்தாய் நீ


காசைக் கொட்டி
ஆசை தீர்க்க
அலைந்து திரியும்
ஆண்களால்
வேசை வீட்டுக்
கதவுகளின் - தட்டல்
ஓசை வீதம்
உயர்கிறது.
மோசம் செய்து
காசு தேடும்
தாசி அவள்
வங்கிக் கணக்கும்
உயர்கிறது - இதனால்
வேசை தேடும்
ஆண்மகனின்
வறுமை வீதம்
உயர்கிறது.

ஓ ஓ ஓ

மீசை நரைத்த போதிலும்
தாசி தேடும் ஆண்களே,
உடலை விற்று
உடல் வளர்க்கும்
ஒழுக்கங்கெட்ட பெண்களே
உயிர் கொல்லி நோய்களின்
தொழிற்சாலை நீங்களே

ஓ ஓ ஓ

ஒளிந்திருக்கும் மரணத்தைத்
தேடப்பிறந்த மனிதனே
மரணத்தின் பின்னால்
மறுவாழ்வும் இருப்பதால்
இவ்வாழ்க்கை
இன்பத்தால்
அவ்வாழ்வை இழக்காதே
உலக வாழ்வின் இறுதியில் நீ
உடல் அழுகி இறக்காதே
இறப்பதற்காக வாழ்பவன் நீ
சற்றுச்
சிறப்புடன் வாழப்பார்.





## கடிகாரம்

மரண
இலக்கை நோக்கி
இயங்கும் உயிரின்
வேகமானி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

அன்பின்
ஆழ் கடலில்
ஒரு முத்து.



# உப்பு

நீரில் பிறந்து
நீரிலே கரைந்தழிவான்
இவன்
மானிட உணவை
மகத்துவமாக்குவான்.



# இடிக்கும் இசைகள்

சமூகக் கவிதைகள்
சாக்கடைக்குப் போகும்காலம்
எட்டவல்ல
மிகக்கிட்ட - சில
காதல் சிட்டுக்களின்
இரசனை கருதி - இப்போ
காதல் கவிதைகளே
கடல் தாண்டி ஒலிக்கின்றன.
தத்துவப்பாடல்கள் - இப்போ
தரம் குறைந்து
புகழ் இன்றி நின்றிட்டன
காலத்தால் மறக்கப்பட்ட - சில
காதல் பாடல்களோ
துள்ளிசை வடிவில் - பலர்
தூக்கம் கெடுக்கின்றன.

மெல்லிசைப் பாடல்களோ
நல்லிசை அறியார்
செவிகளில்
மறுதாக்கம் அடைகின்றன
அன்று
புண் பட்ட உள்ளங்கள்
துன்பம் மறந்து,
துயில் கொள்ள
மக்கள் திலகம் தந்த
மகத்தான பாடல்கள்


இப்போ
பொப்பிசை வடிவில்
இடியென ஒலித்து
பலர் துயில்
கலைத்துச்செவிச்
சோணைகளைக் கிழிக்கின்றன.

இந்த
அசுரத்தனமான
இசை ரசனை
மனிதன்
அரக்கனாய் மாறுவதன்
அறிகுறியோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கன்விலும் இழக்காத
கற்பிருந்தும்
கற்பிழந்த
கன்னிக்குன்னைக்
கணவனாய் ஆக்கிடும்
காதல்

♈ ♈ ♈ ♈

காமக் கடலில்
மூழ்கிக் கிடக்கும்
பூமியில்
காதல் போர்வையால்
கற்பழிக்கப்பட்ட
கன்னியரோ ஏராளம்.

♈ ♈ ♈ ♈

காதல்
கண்மறைத்ததால்
கற்பிழந்த கன்னியரோ
காதலால்
உன் கண்மறைத்துக்
கரம்பற்ற முயல்வர் - நீ
காதலிப்பது
கவனமடா காளையனே.

♈ ♈ ♈ ♈

கற்பிழந்தும்
தப்புணராக்
கன்னியர் மத்தியில் நீ
கண்டதும் காதல்
கொண்டிடல் தப்படா.

♈ ♈ ♈ ♈

தப்பான வழிசென்று
கற்பிழந்த கன்னியரைக்
கரம் பற்றி வாழ்வதிலும்
சன்னியாசியாய்ச்
சாவது மேல்.

♈ ♈ ♈ ♈

கற்பிழந்த கன்னியரே
தப்புணர்க
வாடிய மலர் என்றும்
மாலைக்கு ஆகாது
உன் நிலைமை
நீ உணர்தல்,
நன்றன்றோ?

♈ ♈ ♈ ♈





சத்திய காதல்
ஒரு தலையாகி
சாக்கடையில்

✠ ✠ ✠

பணத்தால் வரும்
பைத்தியக் காதலோ
கொட்டகை தாண்டி
கட்டிலறை வரை

✠ ✠ ✠

அழகால் வரும்
ஆசைக் காதலோ
பூச்சோலைகள் தாண்டி
நீரோட்டங்கள் வரை

✠ ✠ ✠

பெண்ணே விழித்திரு
பைத்தியக்காதலன்தன்
இச்சை தீர்ந்ததும்
பிச்சை இட்டுனை
எச்சமாக்கிடுவான்.

✠ ✠ ✠

ஆசைக் காதலனுனை
அனுபவித்த பின்
அரைகுறையில்
அந்தரத்தில் விட்டிடுவான்.

✠ ✠ ✠

உள்ளத்தால் உனைவிரும்பும்
உண்மைக்காதலன்
இறுதிவரை
உன்வாழ்வை
இன்பமயமாக்கிடுவான்.

✠ ✠ ✠

சிந்தித்திடு பெண்ணே
உள்ளத்தால்
உனைவிரும்பும்
உண்மைக் காதலனை
ஏற்றிடு
பணத்தைக் கண்டு
ஏங்காதே
அழகைக் கண்டு
மயங்காதே

சத்திய காதலன்
நித்தமுனை விரட்டின்
பித்தனென நினைத்தவனை
விரட்ட வழி தேடி
எதிர்காலக் கணவனை
நிகழ்காலக் காதலனாய்க்
கண்டதிறந்த காலம்
என நீ
பொய்யுரைத்தொதுக்கிடாதே

✠ ✠ ✠

சத்தியக் காதலைச்
சாக்கடையில் தள்ளி
அவனைச்
சாவை நோக்கிச்
செலுத்தாதே

✠ ✠ ✠

உண்மைக்காதலை
இனமறிந்துன்
பெண்மை சிறக்க
வழிசெய்திடு

✠ ✠ ✠

காதல் போர்வையால்
காமவேட்டையாடும்
காளையர் மத்தியிலுன்
காதலனைக்
கவனமாகக்
கண்டு பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது ஒன்றே இலவசம்

கற்பக மரத்தடியில்
கற்பனை செய்திருந்தேன்
காதலியின்
கரம்பற்றிக்
கவிமொழிகள்
கதைப்பதாக
காரணம்
கற்பனை மட்டுமே
காசின்றிக்
கண்டிடலாம்.





## ஊனமற்ற ஊனம்



காலையிலே
கால் இழந்து
நண்பகலில்
பார்வையின்றி
மாலையிலே
மழலையுடன்
பாத்திரங்கள்
பல தரித்து
பாத்திரமேந்துவது
பாரில்
பல ஜீவன்கள்.

● ● ●

ஊமையின்றிப் பிறந்திருந்தும்
உழைத்துவாழ
உறுதி இன்றி
உண்மை மறைத்து
வாழ்வதனால்
ஊனமற்ற
உடலிருந்தும்
நன்மை ஏதும்
விளைவதில்லை.

● ● ●

உண்மையிலே
ஊனம்பெற்றும்
உறுதியுடன் வாழ்பவன்தான்
உள்ளத்தால்
ஊனமின்றி
உலக வாழ்வில்
உயர்கின்றான்
மறுமையிலும்
மகிழ்கின்றான்.

● ● ●

அரிதிலும் அரிதான
அழகுடல் பெற்றும்
சிறிதிலும் சிறிதான
சில்லறைச் செயல்களால்
சில்லறை தேடுவது
பெரிதிலும் பெரிதான
சுவர்க்கத்தின்
வாசலில் சுவரிடும்
இம்மையிலும்- உன்
இன்பத்தைக் கெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியூர் போனேன்



உள் நாட்டு
உழைப்பில்
ஊதியம் போதாது
கைநிறையக்
காசுதேடக்
கடல் தாண்டிச் சென்றேன்.

☯ ☯ ☯

இயந்திரப்பறவையில்
விண்ணுயர்ந்து பறக்கக்
கோட்டை யிலென்
கற்பினை இழந்தேன்.

☯ ☯ ☯

உறவென்று சொல்ல
உயிர் ஒன்றும் இன்றியென்
உணர்வுகளைக்
குழிதோண்டி
உள்ளத்துள் புதைத்தேன்.

☯ ☯ ☯

பணிப்பெண்ணாகப்
பல நாட்கழிய
இடையில் சில
காடையர்க்கும்
இரையானேன்.

பொருள்தேட போய் என்
பொக்கிசத்தை இழந்தேன்
உள்ளத்தால்
உயிர் இழந்து
நடைப்பிணமாய்
நாடு வந்தேன்.

☯ ☯ ☯

சொத்துச் சேர்க்க
சென்றங்கு
செத்து விட்டேன்.
உள்ளத்தால்,
காசுதேட
சென்றவள் நான்
கருவோடும்
வீடு வந்தேன்.

☯ ☯ ☯

உழைத்து வந்த
ஊதியத்தால்
பிழைத்து வாழ இயன்றாலும்
சிதைந்து போன
என் வாழ்வைச்
சீர் படுத்த இயலாதே!



# இனிமை, இன்பம், இறப்பு



இதழ்களால் உறிஞ்சுதல்
இனிமை
உள்ளே இறங்குதல்
சுகம்
இறங்கியவன் இயங்குதல்
இன்பம்
அவ் வெண்ணுடலை
அணு அணுவாய் அனுபவித்தலோ
தனிச்சுகம்
அதன்
விளைவுகளோ
விபரீதம்

♦ ♦ ♦ ♦

புகையாய் புகுந்து
புயலாய் இயங்கி
உன்னை
அணு அணுவாய்
அழிக்கவரும்
கூற்றுவனை - நீ
ஆசையாக
அனுமதித்தல்
ஆகாது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக்குள் கண்ணீர்



பிறந்த மண்ணைப்
புகழ்கின்றேன்
அருவிகள்
ஊற்றெடுக்கும்
அழகிய பூமி
பசும்
தேயிலை போர்த்திய
சுந்திர பூமி
இது
என் கண் குளிர்த்தி
உள்ளத்துள்
கவி படைத்த பூமி

தாய் மண்ணின்
மைந்தர் கண்டு
வாடுகின்றேன்.
வியர்வை
ஊற்றெடுக்கும்
வரண்ட தோல்
வறுமைப்
போர்வையால் போர்த்திய
வாடிடும் உயிர்கள்
இவர்கள்
என்னுள்ளம் உருகிக்
கண்களில்
நீர் படைத்த ஜீவன்கள்.






காதலிக்கப்பட்டேன்
காதலித்தேன்
கைபிடிக்கப்பட்டேன்
கை பிடித்தேன்
கட்டி அணைக்கப்பட்டேன்
கட்டி அணைத்தேன்
முத்தமிடப்பட்டேன்
முத்தமிட்டேன்
கலவிக் கழைக்கப்பட்டேன்
கலவியிலீடுபட்டேன்
மறக்கப்பட்டேன்
மறந்தும் விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்

நிருவாகமற்ற
நிர்வாகத்தை
நியமிக்க
நிகழ்த்தும்
நிர்மூல
நிகழ்ச்சி.

## கிழடு

வினாடி முள்ளின்
ஒவ்வொரு அசைவிலும்
எம்மை நாடி வரும்
இலவசப் பட்டம்.

## எய்ட்ஸ்

தாசியரை
தரிசிக்கும்
தரங்கொட்ட பூமிக்கு
அருளப்பட்ட
வரம்.



## காதலல்ல



''இன்டர்சிடி'' வண்டிகளின்
பின் ''சீட்டின்'' மூலைகளில்
பின்னிப் பிணைந்திடும்
பித்தர்களே - நீங்கள்
செய்வதொன்றும்
காதலல்ல
காமவெறியின் வேகமது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானம்

அணுவளவும் இரக்கமின்றி
அணுவைப் பிளந்து
அகிலத்தை
அழிக்கமுயலும்
அறிவு



## அரசு ஆட்சி

விழிகளைச் சிதைக்கும்
இமைகள்.






அன்புடன் வாழ்ந்து
அனைத்தையும் வென்றிடு
பண்புடன் பழகிப்
பாசத்தை வளர்த்திடு
நட்பை உயர்த்தி
நண்பர்களைப் பெருக்கிடு - அதில்
உன் அறிவைக் கொண்டு
கயவரை ஒதுக்கிடு
பணத்திலும் உயர்ந்தது
பண்பென உணர்ந்திடு
அன்பைப் பெருக்கி - உன்
சொத்தை குறைத்திடு
கவலைகள் கலைந்திடும்
நிம்மதி பெருகிடும்
துன்பங்கள் அழிந்திடும்
இன்பங்கள் மலர்ந்திடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல தொடர்புகளுக்கும்

**T. Thiresh Kumar**
Dammeria
Factory Division
Passara.

**– நன்றி –**
**மீண்டும் சந்திப்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையகத்தின் பதுளை
நகருக்கு அண்மையில்
அமைந்துள்ள 'பசறை'யை
வசிப்பிடமாகக் கொண்ட
த.திரேஸ்குமார் தனது
பத்தொன்பதாவது வயதிலே
இரண்டாவது கவிநூலையும்
வெளியிட்டுச் சாதனை
படைத்துவிட்டார்.

ஈழத்து
இலக்கியவானில்
இன்னுமின்னும்
காத்திரமான
படைப்புகளைத் தர
ஆணித்தரமான
அத்திவாரத்தை இட்டு வரும்
திரேஸ்குமாரின்
முயற்சிகள்
பாராட்டத்தக்கவையே.

**எம்.எம்.எம். முஸ்னி**
**கல்லேல்ல,பொலனறுவை**

**சிந்தனை வட்ட வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org